தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி-3 | தி.பி. 2016 | விடை 12 | (26-5-85) | 65 காசுகள் | இதழ் எண்: 57 | பகுதி 14-17

தமிழீழம் விடுதலை பெறுவதை ம. கோ. இரா. அரசு விரும்பவில்லையா?

தி. மு. க.-வின் அமைதிப் போராட்ட வீரர்களை எதற்காகச் சிறையில் அடைக்க வேண்டும்?

கலைஞரைச் சிறையில் அடைப்பதால் தமிழக அரசுக்கு இழுக்கே!

கலைஞரையும், தொண்டர்களையும் உடனே விடுதலை செய்க!

தமிழீழம் அமைவதில் தமிழக அரசு, தி. மு. க.-வுடன் ஒத்துப் போகவேண்டும்!

தில்லியரசின் இறுமாப்பான போக்கைத் தமிழக அரசு கண்டிக்கவேண்டும்!

இலங்கையில் தமிழீழம் அமைவதை வலியுறுத்தி, திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த 10 நாள்களாக நடுவணரசு அலுவலகங்களின் முன் அமைதியான முறையில் மறியல் செய்து, ஏறத்தாழ இருபதினாயிரம் தொண்டர்களைச் சிறைக்கு அனுப்பி உள்ளது.

உண்மையான தமிழன் ஒவ்வொருவனும் வரவேற்க வேண்டிய போராட்டம் இது. இவ்வகையில் கலைஞரின் வலிவான உறுதியான் தமிழீழக் கொள்கையை நாம் மனமுவந்து போற்றுகிறோம்; வரவேற்கிறோம்; வாழ்த்துகிறோம். அவரும் அவர் தொண்டர்களும் இக் கொள்கையை வலியுறுத்தி நேர்மையான முறையில் அமைதியான போராட்டம் நடத்தி, அதன் மூலம் தமிழர்களின் உண்மையான உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியும் தில்லியின் செருக்கான, புறக்கணிப்பான போக்கை உலகுக்கு உணர்த்தியும் வருவதை மிகவும் மகிழ்ந்து பாராட்டுகிறோம்.

கலைஞர் இதுவரை வரலாற்றில் நடத்திய போராட்டங்கள் அனைத்திலும் இது தலைசிறந்தது; தமிழின வரலாற்றிலேயே பெருமதிப்புப் பெறுவது. தேசியப் புரட்டல் கொள்கைகளைப் பேசியும், ஒருமைப்பாடு, ஒற்றுமை என்று பொய்யாகவும் புளுகாகவும் நடித்துக் காட்டியும் தம் வயிறு கழுவி வருகின்ற மூப்பன்களுக்கும், பழனியாண்டிகளுக்கும் வேண்டுமானால், கலைஞரின் இந்தப் போராட்டம் தவறாகவும், வரம்பு மீறியதாகவும் படலாம். இன்னும் போலிப் பொதுவுடைமை பேசும் இராம மூர்த்திகளும், நம்பூதிரி பாடுகளும் இப் போராட்டத்தைக் கண்டு, முகஞ்சுளிக்கலாம். ஆனால், உண்மையான தமிழர்களைப் பொறுத்தவரையில், அவர்களின் பல்லாண்டுக்கால இன முன்னேற்ற முயற்சிகளுக்கு இப் போராட்டம் ஊக்கமளிப்பது; உறுதி தருவது! இதன்வழி, தமிழினத்தின் ஒட்டுமொத்தமான விடிவுக்குக் கதவைத் திறந்திருக்கிறார் கலைஞர், என்று சொன்னால், அது மிகையாகாது. அதற்காக, மீண்டும் ஒரு முறை கலைஞர் அருட்செல்வனாருக்கும், அவரைப் பின்பற்றும் பல்லாயிரக் கணக்கான தொண்டர்களுக்கும், நம் தலைதாழ்ந்த அன்பு கலந்த வணக்கங்களையும் நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்து கொள்கிறோம்.

தமிழீழத் தமிழர்களை ஒழித்தே கட்டுவது என்னும் கொடுமையான அரக்கத் தன்மையில் நடந்து கொள்ளும் சிங்கள வெறியன் செயவர்த்தனாவின் அகங்காரமும், அடாவடித்தனமும் கொஞ்சமும் குறைத்து மதிப்பிடக்கூடியன அல்ல. இனி அவனின் பூதகணங்களாக இருந்து இயங்கும் அதுலத்முதலி போன்ற எமகிங்கரன்களும், புத்தரின் துவராடைக்குள் ஒளிந்து நிற்கும் இட்லரின் இழிபிறவிகளும் சேர்ந்து நாள்தோறும் தமிழர்களைக் கொன்று குவிப்பதையே தம் அன்றாட வாழ்க்கைப் பணிகளாகச் செய்து வருவதையும் எவரும் மறுத்துப் பேசியோ மறைத்துப் பேசியோ இங்குள்ள தமிழரை அமைதிப்படுத்தி விடமுடியாது. மூப்பன்களுக்கும், பழனியாண்டிகளுக்கும், இராமமூர்த்திகளுக்கும், நம்பூதிரி பாடுகளுக்கும் அவர்களின் உடல் தசைகள் எவ்வளவு முகாமையானவையோ, அவ்வளவு முகாமையானது தமிழின விடுதலை; தமிழீழ விடுதலை. தில்லித்திமிரில் அவர்களின் கொக்கரிப்புகள் கலைஞரை யன்று அவரின் கடைத்தொண்டனையும் அசைத்து விடமுடியாது; அடக்கி விடமுடியாது.

இந்தப் பணந்தின்னிகளுக்குத்தாம் வடவரின் கலவை அரத்தம் உடல்களில் ஓடிக் கொண்டுள்ளது. ஆனால் இந்தத் திராவிடக் குஞ்சுகளுக்கிருக்க வேண்டிய சூடும் சுரணையும், மானமும், மதிப்பும் எங்கே போயின? 'தமிழீழம் தனி நாடாக விடுதலை பெறுவதைத்தான் நாங்களும் ஆதரிக்கிறோம்' என்று இராசீவ்காந்தியின் செவிட்டுப் பறைகள் அறுபடுமாறு உரக்கக் கூவிவிட வேண்டியதுதானே! ஏன் இவர்கள் பின்வாங்க வேண்டும்? அன்னை இந்திரா கொடுத்த அதிகார முலைப்பால் இன்னும் இவர்களின் வாய்களில் ஒழுகுகின்றதோ? அல்லது தமிழீழம் விடுதலை பெறுவதை ம. கோ. இரா. அரசு விரும்பவில்லையோ?

எனவே தப்பித்தவறித் தமிழினத்திற்குக் கலைஞர் வழிக் கிடைத்த ஒரே உரத்த குரலையும் நெறித்துவிடலாம் என்று, அடிமைத் தமிழக அரசு நினைத்துவிட வேண்டாம். அவரின் எழுச்சியைக் காட்டியேனும் தில்லிச் செவிடர்களின் திமிர்ந்த மூளைகளுக்குத் தமிழர்களின் 'தணியாத தமிழீழ ஆதரவை உடனே கூறி விடிவு காண முயற்சி செய்திட, இங்குள்ள திராவிட அரசின் உண்மைத் தமிழர்களும் உணர்வுத் தமிழர்களும் (அவ்வாறு சிலர் இருந்தால்) முன்வருவார்களாக!

— பெருஞ்சித்திரனார்

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

தொடர் - 11

ஐந்து நாடுகளில் முப்பது நாள்கள்!

என் முதல் ஐரோப்பிய சுற்றுச் செலவு

4. பாரிசு நிகழ்ச்சிகள் : (தொடர்ச்சி)

இந்தியாவைப் பொறுத்த அளவில் ஆண்கள், பெண்களின் ஒழுக்கத்தை வரையறுத்ததற்கும் அவர்கள் இயக்கத்தைக் கட்டுப் படுத்தியதற்கும், அடிப்படையான இரண்டு காரணங்கள் தெரிகின்றன.

ஒன்று, பெண்கள் தங்கள் விருப்பம் போல் இயங்கினால், வர்ணாசரம அமைப்பு சிதைந்து ஆண்டான் அடிமைக் கோட் பாடு இல்லாமற் போய்விடும்; அதனால் குலங்கள், சாதிகள் ஒன்றாகக் கலந்து விடும்—என்பது. இது தலையாயது.

இரண்டு, பெரும்பாலும் பாலியல் உணர்வில் பெண்களை ஆண்கள், முழுநிறைவு பெறச் செய்வது என்றுமே கடினமாத லால், அவர்களை அதன் பொருட்டுத், தமக்குற்ற ஒப்பந்த அடிமைத்தன்மையிலிருந்து, விலகிப் போகாமல் செய்து வைக்க வேண்டும்—என்பது. இது, பொதுவானது.

ஆனால், தமிழியல் வாழ்வு முறைகளைப் பொறுத்த அளவில், பெண் அடிமை என்பதற்கு விரிவான சான்றுகளில்லை. அவள் வாழ் வியல் தோழமை உடையவளாகவும், தற்கட்டுப்பாடுள்ளவளாக இருத்தல் வேண்டும் என்பதற்குமே திருக்குறள் முதலிய நூல்களுள் சான்றுகள் உள (குறள் 56). அவளைப் புறக்கட்டுப்பாடுகளால், அகப்படுத்திக் கொண்டு, அந்தக் கட்டுப்பாட்டை ஒழுக்கம் என்று கூறப்படுவதைத் தமிழியம் கண்டிக்கிறது. (57). அவளை வாழ்க்கைத் துணை என்று சமநிலையில் வைத்துப் பெருமைப் படுத்தியவர்கள் தமிழர்களே! மேலை நாகரிகக் கூறுகளில், பெண் ஒரு துய்ப்புப் பொருளாகவும், உடைமைப் பொருளாகவும் அள வுக்கு மீறிக் கருதப் பெறுகிறாள்.

இந்தியாவில் வேதவொழுக்கம் தலையெடுத்தும், தமிழியல் வாழ்வில் ஊடுருவியும் நின்ற பின்னர், தமிழரிடத்திலும் அஃது ஓரளவு மதிக்கப் பெறுவதைத் தமிழியல் பொதுமை வாழ்வை, வரலாற்று வழி அறிந்தவர்கள் போற்றமாட்டார்கள். ஆரியப் பண்பாட்டிற்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் வேறுபாடும், பிரித் துணர்வும் தெரியாதவர்களே, ஆரிய வேதவொழுகப் பெண்ணி யல் கோட்பாட்டைத் தமிழரது என்று மயங்கக் கருதுவார்கள். இஃது உண்மையில்லாப் புன்மை சான்றதாகும்.

தமிழியல் பண்பாடுகளில், பெண்மையின் தனிச்சிறப்பியல்கள் நன்கு மதிக்கப் பெறுகின்றன. (குறள் எண்: 54). அதேபொழுது குமுகாய நிலையில் அவள் தற்கட்டுப்பாட்டுக்குள் உள்ளாக்கப் படுவது (குறளெண் 56) போலவே, ஆணும் தற்கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்படுகிறான். (குறளெண் 974). எனவே, தமிழியல் வாழ்வைப் பொறுத்தமட்டில், தனிப்பட்ட நிலையில், பெண் ஆணைவிடச் சற்று உயர்வாகவே மதிக்கப்படுவதும், ஆணுக்குத் துணையாக அவள் கருதப்படுவதும், மீமிசை மாந்தக் கோட்பாடே ஆகும். அதுவல்லாமல் ஆணுக்குள்ள அத்தனை உரிமைகளும் பெண்ணுக்கும் உண்டு என்றே பழந்தமிழ் நூல்கள் பறைசாற்று கின்றன. பெண்ணுரிமை மறுப்பு எங்கும் வெளிப்படையாகத் தெரிவதில்லை. தனக்குற்ற காதலனைத் தேர்வதற்கும் அவனொடு வாழ்வதற்கும் உரிமை மறுக்கப்பட்டதாகச் சான்றுகளில்லை. தற்கட்டுப்பாடின்றிப் பொதுநிலைக் குமுகவொழுக்கம் குன்றிய ஒருத்தி, பரத்தை என்று இகழப் பெறுவது போலவே, பொது நிலைக் குமுகவொழுக்கம் குன்றிய ஒருவனும் 'பரத்தன்' என்று இகழப் பெறுகிறான். பொதுவில் பரத்தமை பெருமைப் படுத்தப் பெறவில்லை. மாறாக இகழப் பெறுவதைப் பார்க்கிறோம்.

பண்பாட்டியல் வளர்ச்சி நிலையில், மாந்தன் பரத்தமையி லிருந்தே, தனிச்சிறப்பான இல்லற வாழ்வியலுக்குத் தன்னை வளர்த்துக் கொண்டான். இனி, மீண்டும் அவன் விலங்கு வாழ்க்கையான பரத்தமை வாழ்வியலுக்குப் போவது இழுக்கே! மேலிருந்து கீழ் இறங்குவதே அது.

தமிழியல் பண்பாட்டில் மிகச்சிறந்ததும், இந்தியப் பண் பாட்டில் பொதுவாய்ச் சிறந்ததுமாகிய இல்லறவாழ்வியலை, எவரும், எந்த நாட்டினரும், எந்தவிடத்திலும், எந்தக் காலத் திலும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. அதேபோல், உரிமை அல்லது அடிமை நீக்கம் என்னும் பெயரில் ஒழுக்கக்கேட்டை எவ ரும் வலியுறுத்த முடியாது. ஆனால், ஒழுக்கம் அல்லது பண்புக் கட்டுப்பாடு என்னும் பெயரால், ஆணோ பெண்ணோ தங்களுக் குள்ள உயிரியக்க உரிமையை அல்லது வாழ்வுரிமையை இழந்துவிடும்படி குமுகவியல் அமைப்பு இருக்குமானால்; அதை நாம் வரவேற்கவும் கூடாது.

ஐரோப்பிய நாடுகளில் உயிரியக்க உரிமை, அல்லது வாழ் வுரிமை என்னும் பெயரால், ஒழுக்கத்தைக்கூட அவர்கள் புறக் கணித்து விடுகிறார்கள். ஒழுக்கம் என்னும் கோட்பாடு தனி மாந்த உரிமையில் தலையிடுவதை அவர்கள் விரும்புவதில்லை, ஆனால், இங்கோ, ஒழுக்கம் என்னும் பெயரில் உயிரியக்கத்தையே வாழ்வுரிமையையே இவர்கள் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார்கள். இவ்விரண்டு, உரிமைக்கோட்பாடும், ஒழுக்கக்கோட்பாடும், உயிரி யக்க முன்னேற்றத்திற்குத் தடையானவையே என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்; அத்துடன் ஒப்புக் கொள்ளு

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க)

நம் இயக்கத்தின் உண்மை நிலைகள்-6

- கழக முதல்வர் -

29: அவ்வாறு என்னதான் தம்மேல் பழி கூறப் பெறுகிறது எனில் கூறுவோம். நாம் இனமானக் கொள்கையிலும்; ஓரளவு தனி நாட்டுக் கோட்பாட்டி லும், தமிழீழக் கோரிக்கையிலும் ஒன்றுபட்டுப் பெரி யாரின் தனிமூலக் கழகம் என்று திராவிடர் கழகத்தை மதித்து, அவர்களுடன் இயங்கிய பின்னை, நாம் என்னென்றறியாத அவர்கள் கொண்ட ஒரு மனமாறு பாட்டால் ஐரோப்பியச்செலவு முடிந்து தமிழகம் வந்த பின்னர், அக் கழகத்தவர் நம்மைப் பலவகையிலும் ஒதுக்கியும், மறைத்தும் வருவதுடன் நில்லாமல், நம் கழகத்துக்கு ஆதரவளிக்கக் கூடாதென்றும், நம் கழக அன்பர்களுடன் ஒத்தியங்கக் கூடாதென் றும், பலவிடங்களிலும், பல அன்பர்களிடமும் கூறி யும், எழுதியும் வருவதாக அறிந்தோம். அத்துடன் அமையாமல், ஆங்காங்கு அக் கருத்துக்குச் சிற்சில விடத்துச் சிலர் விளக்கம் கேட்டவிடத்து: நாம் பார்ப்பன இயக்கமான ஆர். எசு. எசு. - வுடன் உறவு வைத்துக் கொண்டுள்ளோம் என்றும்; அவர் கள் மறைமுகமாகத் தரும் பண உதவியாலேயே நாம் மூன்று இதழ்களை முட்டில்லாமல் நடத்தி வருகின்றோம் என்றும்; அதுவுமன்றிப் பெரியாரை நாம் நம் நலத்துக்காகவே எடுத்துப் பேசுகின் றோமே யன்றி, அவர் கொள்கைகளை நாம் பின் பற்றுவதோ பாராட்டுவதோ இல்லையென்றும்; பெரியாரை நாம் வேறு வகையாக மக்களுக்குக் காட்டுகின்றோம் என்றும்; பெரியாரைப் பின்பற்றும் அவர்கள் பாதை வேறு, நம் பாதை வேறு என்றும்; பழியாகவும் இழிவாகவும், கீழாகவும் எடுத்துப் பேசி வருகின்றதாக, நம் அன்பர்கள் பலரும் நமக்கு நேரிலும் மடல் வழியும் தெரிவித்து வரு கிறார்கள். இக் குற்றச் சாட்டுகள் நமக்குப் பெரிதும் அதிர்ச்சி தருவனவாகவும் நம்மை மிகவும் அவ மதிப்பனவாகவும் உள்ளன.

30: நாம் நினைக்கவே இயலாதபடியும், நினைத் தாலே மனங் கூசும்படியும் நமக்கு முற்றிலும் மாறாக உள்ள இந்துமத வெறி இயக்கமான ஆர். எசு. எசு. உடன் நாம் எப்படித் தொடர்புகொள்ள முடியும்? எதற்காக அவ்வாறு ஒரு தேவை நமக்கு ஏற்படும்? பணத்திற்காக என்றால், இதைவிட நம்மை இழிவு படுத்திப் பேசும் வேறு ஒரு நிலை இருக்கமுடியுமா? எண்ணிப் பாருங்கள். இனி, இவர்கள் இவ்வாறு கூறுவதுபோல, பொதுவுடைமையாளர்கள் சிலர் நாம் அமெரிக்க உளவுத் தொடர்பாளர்கள் (C.I.A. Agents) என்று பச்சைப் பொய்யைக் கட்டவிழ்க்கி றார்கள். நம்கருத்துடன் ஒழுக்காட விரும்பாத நிலையில் நம் நடைமுறையில் பழியும், இழிவும் கூறுவதை நாம் எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்? வாய்ப்பும், வசதியும் உள்ள அவர்கள் கூற்றை மறுதலிக்க நாம் நிறைய முயற்சி செய்ய முடியாதவர்களாக இருக்கிறோம் என்கிற காரணத்துக்காகவே, அவர் கள் என்னவும் செய்யத் துணிந்தவர்களாக இருக் கிறார்கள். எனவேதான் நாம் இத்தகைய விளக்கங் களை எழுதிக் கொண்டிருக்கவேண்டி யிருக்கிறது.

31: இனி, பெரியாரை நாம் நம் நலனுக்காகப் பயன்படுத்திக் கொள்கிறோமாம். இஃது என்ன கொடுமை? நம் நலன் என்பதே மொழியும், இனமும், நாடுந்தாமே. இவற்றுக்கோ அல்லது இவற்றுள் ஒன்றுக்கோ தானே நாம் பெரியாரை முன்வைத்துப் பேசமுடியும்? அவ்வாறு பெரியாரை நாம் பேசக் கூடாதென்றால், அஃதென்ன புதுத் தீண்டாமை? நாம் பேசாமல் வேறு யார் பேசுவது? பார்ப்பனரா பேசுவார்கள்? அவரைப்பற்றி நாம் பேசுவது நம் நலத்திற்காக என்றால், இதை யாரேனும் ஒப்பமுடி யுமா? பெரியாரைப் பேசுவதால் நலம் வரும் என்றால், அந்த நலத்தைக் கருதித்தான் இவர்கள் பேசுகிறார் களா? அவ்வாறானால் அதை நாம் ஏன் கருதக் கூடாது? பெரியார் இவர்களுக்கு மட்டுமே சொந்தமா? அவரின் சொத்துக்களைத் தாம் சிலர் சொந்தம் கொண் டாடலாம். பெரியாரும் குறிப்பிட்ட சிலர்க்குத்தாம் சொந்தம் என்றால், அப்பெருமகன் எவ்வாறு தமி ழினத்திற்கு உழைத்தார் என்று சொல்லமுடியும்? இவர்களுக்கு மட்டுந்தானே அவர் உழைத்திருக்க வேண்டும்?

காரல் மார்க்சையும், இலெனினையும் உலகம் முழு வதும் சொந்தம் கொண்டாடும் பொழுது, செருமனியி லிருந்தோ-உருசியாவி லிருந்தோ எந்த மறுப்போ, முணுமுணுப்போ வருவதில்லையே! அவர்கள் மகிழ்ச்சி யடைவதுடன் ஊக்கமன்றோ கொடுக்கிறார்கள்; பொது நலம் கருதி, உலகுக்குத் தங்களின் உழைப்பைத் தந்த அல்லது தருகின்ற பொதுவுணர்வுடையார் யாவரும் பொதுவர்தாமே? அவர்களைத் தம் கட்சியினர் அல்லது இனத்தவர் அல்லது சாதியினர் மட்டுமே கொண்டாடலாம் அல் லது சொல்லிப் பிழைக்கலாம் என்றால், அவர்கள் எவ்வாறு பொது நலத்துக்கு உழைத்தவர்களாக இருக்க முடியும்? இவற்றை ஆய்ந்தோய்ந்து பாராமல், ஏதாவது வாய்க்குவந்தவகையில் கருத்தை வெளிப்படுத்துவது, இன நலத்துக்குகந்த தாக இருக்கமுடியுமா?

32: நாம் மூன்று இதழ்களை நடத்துகின் றோம் என்றால், தொல்லைப்படாமலா நடத்துகின்றோம். உழைப்பு நிலையில், பொருளியல் நிலையில், அச்சடிக்கும் இதழ் களை விலைபோக்கும் நிலையில், விற்றவர்கள் விற்பனைப் பணத்தை அனுப்பியுதவாத நிலையில்,- மற்றும் அச்சக நிலைகளில் எல் லாம் கடந்த இருபத்தாறு ஆண்டுகளாக எத்தனை யெத்தனை தொல்லைப்பட வேண்டி யிருந்தது? இன்னும் நாள்தோறும் பட்டுக் கொண்டுதானே உள்ளோம். இதுவரை அவ்விதழ்களுக்கு, அரசோ வேறு எந்தக் கட்சியோ, ஒரு சிறு உதவியேனும் செய்த தாகச் சொல்ல முடியுமா? தமிழர்கள் என்று சொல்லப்படுபவர்கள் ஆண்ட அப்பொழுதும் அப்படித்தான், தமிழர் அல் லாதவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் ஆள்கின்ற இப்பொழுதும் அப்படித்தான்? இன்னும் சொன்னால் பேராயக் கட்சியினர் ஆண்டபொழுதாவது, தென்மொழி ஏறத் தாழ600 நூலகங்களுக்குப் போய்க்கொண் டிருந்தது. நம் தமிழ் இயக்கத்தவர்கள் வந்து ஆண்டபொழுது, அதுவும் நிறுத் தப்பட்டு விட்டது. கேடுகெட்ட சிறு சிறு இதழ்களுக்கெல்லாம் அரசுச் சார்பில் குடும் பக் கட்டுப்பாட்டு விளம்பரங்கள் போன் றவை தந்து உதவப்பட்டன. நாம் ஒரு முறை, அரசினரிடத்தில் எழுதி அக் குடும் பக் கட்டுப்பாட்டு விளம்பரத்தைக் கேட்ட பொழுது 'இல்லை' என்று கூறி மறுத்து விட்டார்கள். அந்த அளவில் அரசுச் சார்போ, கட்சிச் சார்போ, சாதிச்சார்போ, செல்வர்கள் சார்போ நமக்கு என்றுமே இருந்ததில்லை.

33: உண்மையான தொண்டுக்கும், தமிழ் அறிவுக்கும், வளர்ச்சி உழைப்புக்கும் நமக் குக் கிடைக்கும் பரிசு, இந்தத் தமிழர்களி டம் இதுதான்! வேறென்ன எதிர்பார்க்க முடியும்? தமிழின் பெயரால், தமிழினத் தின் பெயரால், இலக்கியத்தின் பெயரால் பலவகையான பொய்ம்மைச் செயல்களும் போலி விளம்பர வேடிக்கைகளும் இங்கு நடந்து வருகின்றன. ஆனால், கடந்த கால் நூற்றாண்டுகளாக நடந்து வரும், மெய் யான தமிழ்த் தொண்டுக்கும், இன உழைப் புக்கும் வேறு எவருமே செய்யத்துணியாத வகையில், தன்னந் தனியராகச் செய்யும் பல்வேறு வகையான, நாட்டு முன்னேற்ற முயற்சிகளுக்கும், இந்தத் தமிழினமும், தமிழ் நாடும், தமிழக அரசும் என்ன உத வியை நமக்குச் செய்துவிட்டன. தனிப் பட்ட முறையில் நம்மேல் இரக்கப்பட்ட, அன்பு காட்டிய, காட்டிவரும் உண்மைத் தமிழன்பர்கள் ஒரு சிலர் செய்த, செய்து வருகின்ற அன்பளிப்பு உதவிகளைத் தவிர, வேறு என்ன உதவிகளை எவரிடமும் நாம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பெற் றுக்கொண்டுள்ளோம் என்று எவரேனும் சுட்டிக்காட்ட முடியுமா? தெரிந்தோ தெரி யாமலோ, விரும்பியோ விரும்பாமலோ, எண்ணியோ, எண்ணாமலோ சிலர் நமக்கு அவ்வப்பொழுது கடன்கள் என்ற பெய ராலும், நூல் அச்சீட்டு உதவி என்ற பெயராலும், செய்த உதவிகளை அவ்வப் பொழுது அவ்வந் நூல் வெளியீடுகளி லேயே நாம் வெளிப்படுத்தியுள்ளோம்.

34: மற்றபடி, தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் என்னும் மூவிதழ்களும் இன் றுங்கூட பேரிழப்பில்தான் நடந்து வரு கின்றன. தென்மொழிக்கு மட்டும் கடந்த இருபத்தைந்தாண்டுகளில், எண்பத்தாறு யிரதது எண்ணூறு உருபா (86,800) இழப்பு ஏற்பட்டுள்ளது! மற்ற இரண்டு இதழ்களுங்கூட, இழப்பில்தான் நடக்கின் றன. இவ்விழப்புகளை நாம் எவ்வாறு ஈடு கட்டுகிறோம் என்பதை நம் நெருங்கிய

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

உ. த. மு. க. -வை வலுப்படுத்துங்கள்!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனுய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழினமுன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3 இதழ் எண்: 57 (26-5-85) பகுதி 14-17

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம்!

12-5-1985-இல் ஈரோட்டில் கூடியது!

அன்பர்கள் பெருவாரியாகக் கலந்து கொண்டனர்!

போராட்டம் விரைவில் தொடங்கப்பெறும்!

இதுநாள் வரையில், கழகக் கட்டமைப்பிலும், ஆங்காங்கு மாவட்ட, வட்ட அமைப்பிலும், கழகக் கருத்துகளைக் கீழ்மட்ட மக்களிடையே பரப்புவதிலும் கருத்துச் செலுத்தி வந்த உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், கடந்த ஆறு திங்களுக்கு முன், 'தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி' என்னும் அமைப்புடன் தன்னை இணைத்துக்கொண்டு, தமிழக விடுதலைச் செயற்பாடுகளில், ஈடுபடப் போவது பற்றியும், அடுத்து இயங்கும் போராட்ட முறைகள் பற்றியும், கழக விரிவாக்கம் பற்றியும், மாநில, மாவட்ட வட்ட அமைப்பாளர்களுடனும், முதன்மைச் செயற்குழு, தலைமைச் செயற்குழு ஆகியவற்றுடனும், கலந்துப் பேசி முடிவெடுக்கும் நோக்கத்துடன், ஏற்கனவே, கடந்த 4-3-1985-ஆம் பக்கல் ஈரோட்டில் கூடி முடிவெடுத்தபடி, சென்ற 12-5-1985-ஆம் பக்கல் ஞாயிறன்று, காலை 9 மணியளவில், ஈரோடு, பூரண விடுதியின் மேல் மாடி அரங்கத்தில், மாநிலச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.

முன்னரே அறிவிக்கப் பட்டிருந்தபடி, மாநிலச் செயற்குழுக் கூட்டம் கூடுவதற்கு முன்னர், கழக மேனிலைச் செயற் குழு 11-5-1985 இரவு 10 மணியளவில், அதே பூரண விடுதியின் மேல் மாடி நிகழ்ச்சியரங்கத்தில் கூடி, மறுநாள் நடைபெற விருக்கும் செயற் குழுவின் நடவடிக்கைகள் பற்றி ஆய்ந்து முடிவு செய்தது. அக் குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார், துணைப் பொதுச் செயலர் தென்னவன்கோ, அமைப்புச்செயலர் தென்மொழி ப. துரையரசன், முதன்மைக் குழு உறுப்பினர்கள், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி நா. இளமாறன், பெரியார் மாவட்ட அமைப்பாளர் பாவேந்தர் இராமலிங்கம், கோவை மாவட்ட அமைப்பாளர் இளஞ்சேரல் முதுபாண்டியன், பொருளர் பல்லடம் மா. ஆறுமுகம், புதுவை மாநில அமைப்பாளர், சொல்லாய்வறிஞர் ப. அருளி, வடவார்க்காடு மாவட்ட வடக்கு, தெற்கு அமைப்பாளர், செயலாளர்கள், ம. செ. தமிழ்மணி, குமர. தன்னொளியன், தென்னார்க்காடு மாவட்டச் செயலர் சின்னத்துரை, நெல்லை மாவட்டச் செயலர் அதியமான், சென்னை நகரச் செயலர் வினைதீர்குன்றன், ஈரோடு நகரத் தலைவர், புலவர் தி. மு. அரசமாணிக்கனார், ஈரோடு நகரச் செயலர் எழிலரசன், மற்றும் முகாமையான வட்டப் பொறுப்பாளர்கள், கல்லை அருட் செல்வன், தி. இளஞ்செழியன், காட்டுப்பட்டி கண்ணன், மா. பூங்குன்றன், மா. பொழிலன், சென்னை கி. குணசேகரன், திருப்பூர் மாசிலாமணி, மாறன் மாசிலாமணி முதலியோர்களும், சிறப்பு அழைப்பாளர்களாகத் தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணியின் உறுப்பு அமைப்பாளர்கள் புலவர். கலியபெருமாள், (தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி (மார்க்சியம் இலெனினியம்), 'மார்க்சியம் இன்று' இதழாசிரியரும், பார்க்கிய அறிஞரும் ஆகிய எசு. என். நாகராசன் (இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, நடுவண் சேரமைப்புக் குழு (தமிழகப் பிரிவு), 'திராவிட சமயம்' இதழாசிரியரும், சிறந்த மதவியல் ஆய்வாளரும் ஆகிய பர். மு. தெய்வநாயகம் ஆகியோரும் கலந்துகொண்டு, பல்வேறு கருத்துரைகளைக் கூறவும், மறுநாளைய நிகழ்ச்சி வரைவு செய்யவும், முதல்வர் அவர்களுக்கு உதவினர்.

மேனிலைக் குழுவின் ஆய்வுக் கூட்டம் இரவு 12 மணியளவில் முடிவுற்றது.

மறுநாள் 12-5-1985 அன்று காலை 9-30 மணியளவில், மாநில செயற்குழுக் கூட்டம் தொடங்கியது. தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலைத் திருச்சி மாவட்டப் பொருளர் குழந்தை ஈகவரசன் பாடி நிகழ்ச்சியைத் தொடங்கினர். கூட்டத்திற்கு முதல்வர் பாவலரேறு தலைமை தாங்கினர். மேடையில் துணைப் பொதுச் செயலர் தென்னவன்கோ அவர்களும், சிறப்பு அழைப்பாளர்கள் புலவர் கலியபெருமாள், நாகராசன், தெய்வநாயகம் ஆகியோரும் அமர்ந்திருந்தனர்.

கூட்டத்திற்குப் பெரியார், திருச்சி, மதுரை, நெல்லை, தென்னார்க்காடு, வடவார்க்காடு, சென்னை, சேலம், முகவை, கோவை ஆகிய மாவட்டங்களில் விருந்தும், அந்தந்த மாவட்ட, வட்டங்களிலிருந்தும் அமைப்பாளர்களும், பொறுப்பாளர்களும் திரளாக வந்திருந்தனர். அனைவரையும் பெரியார் மாவட்ட அமைப்பாளர் பாவேந்தர் இராமலிங்கம் இன்முகத் துடனும், அன்பகத்துடனும் வரவேற்று நல்லுரை வழங்கினார்.

வரவேற்புரைக்குப் பின்னர், முன்னிரவு நடைபெற்ற கழக முதன்மைக்குழுக் கூட்டத்தின் நடவடிக்கைகள் பற்றித் துணைப் பொதுச் செயலர் தென்னவன்கோ அவர்களும், புதுவை மாநில அமைப்பாளர் சொல்லாய்வறிஞர் அருளி அவர்களும், கூட்ட உறுப்பினர்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தனர்.

அதனையடுத்து, உ. த. மு. க. முதல்வரும், தமிழக மக்கள் விடுதலைக்கூட்டணி அமைப்பாளருமாகிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், தம் தலைமையுரையில், உ. த. மு. க. கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பெற்று, ஆங்காங்கு மாவட்ட அமைப்புகளையும், வட்ட அமைப்புகளையும் அமைத்துக் கருத்துப்பரப்புதல் செய்து வந்தாலும், பொருள் ஏந்துகள் துளியும் இல்லாமையால் எந்தவகையான புறச்செயலிலும், போராட்டங்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள இயலாமல் உள்ளதென்றும், இருப்பினும் வேறு இயக்கங்களைவிட இதன்பணி துணிவும், உறுதியும் வாய்ந்ததென்றும், நாட்டுக்கும், இனத்துக்கும் இது மிகவும் தேவையானதென்றும், அது மிக விரைவில் தன்தகுதி நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளும என்றும் கூறி, உ. த. மு. க. அண்மையில், அதன் நாட்டுப் போராட்டத்திற்கென, அமைக்கப்பெற்ற தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணியில் தன்னை இணைத்து கொண்டதென்பதையும், அக் கூட்டணி விரைவில் நடுவணரசுக்கெதிரான ஒரு போராட்டத்தை முன்வைக்க உள்ளதென்பதையும் விளக்கமாக எடுத்துரைத்த. அப் போராட்டத்தைப் பற்றிக் கழக அமைப்பாளர்களின் கருத்துகளைத் தெரிந்துகொள்ளவும், கழகத்தைப் போராட்ட அளவுக்கு வலுவுடையதாக்கியும், அதற்கு அன்பர்களின் ஒத்துழைப்பையும், ஆதரவையும் உறுதிப்படுத்திக் கொள்ளவுமே இம் மாநிலச் செயற்குழு கூடியிருப்பதாகவும் விளக்கியுரைத்தார்.

அவர் மேலும் உரைக்கையில், கழகத்திற்கென உள்ள கொள்கைகளை முழுமையாகச் செயற்படுத்த வேண்டுமானால், அது விடுதலை பெற்ற தமிழ் நிலத்தில் தான் இயல்வதாக இருக்க முடியுமென்றும், எனவே, தமிழ்நாடு விடுதலை பெறுவதே நம்முடைய மற்றும் பிற இயக்கங்களுடைய அனைத்து முயற்சிகளுக்கும் இன்றியமையாத தலையாய ஒரு செயலாக இருக்க முடியுமென்றும், எனவே, கழகம் அதில் தளராத முயற்சியும், ஈடுபடும் கொண்டுள்ளதென்றும், அம் முயற்சிகளுக்கான அடிப்படைச் செயல் கருத்துப் பரப்புதலே என்பதால் கடந்த மூன்றாண்டுகளாகத் 'தமிழ் நிலம்' இதழைப் பல்வகையான இழப்புகளுக் கிடையிலும் விடா முயற்சியுடன் நடத்திவருகின்றதென்றும், இதன் முயற்சிகளைப் பிற இயக்கங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், பிற தமிழ்நாட்டு இயக்கங்கள், யாவும், ஏற்கனவே முன்காலத்திலிருந்த வலிவும், ஆற்றலும் மிக்க தலைவர்கள் அவற்றை உழுது, விதைத்து, நீர்ப் பாய்ச்சி எருவிட்டு வளர்த்த பின்னர், அவை இன்று பூத்துக் காய்த்துக் கனிந்திருக்கின்றனவாகையால், இப்பொழுதுள்ளவர்கள் விளைவைக் காட்டவும், அறுவடையைச் செய்யவும் முடிகின்றதென்றும், ஆனால் நம் இயக்கமோ, நாமே வித்திட்டு, எருவிட்டு நீர்ப்பாய்ச்சி வளர்க்கவேண்டிய இயக்கமென்றும் அதனால், இதற்கு உழைப்பும், பொருளும் நிறையத் தேவையென்றும், நமக்கு இது விதைப்புக் காலமென்றும், மற்றவர்களுக்கு இஃது அறுவடைக் காலமென்றும், ஆனால் நம் இயக்கந்தான் உண்மையான அதேபொழுதில் வன்மையான — தமிழின விடுவிப்புக்கும் முன்னேற்றத்திற்கும் வழிவகுக்க முடியுமென்றும், இதன் ஆற்றலையும், செயற்பாட்டையும் மிகுக்கவும் பரவலாக்கவுமே கூட்டணியுடன் நாம் இணைந்ததாகவும், அது மற்ற மாநிலப் போராளிகளுடன் சேர்ந்து அனைத்துத் தேசிய விடுதலை இயக்கம் ஒன்றைக் கட்டமைக்கும் என்றும், அதற்கென இங்கமைந்துள்ள கூட்டணி அமைப்பாளர்கள் பெருமுயற்சி செய்து வருகிறார்களென்றும், இவை யாவற்றுக்கும் அடிப்படையாகவும் நம் கருத்துப் பரப்பலுக்கு இன்றியமையாததாகவும் உள்ள தமிழ் நிலத்தை முதலில் மிகவும் வலுப்படுத்தியாக வேண்டுமென்றும், அதன் முயற்சி மிகப்பெரியதென்றும் விரிவாக எடுத்துரைத்தார்கள். -(தொடரும்)

தமிழீழ விடுதலைப் போராளிகள் தங்கள் மன இறுக்கங்களைத் தவிர்த்து ஒன்றுபடவேண்டும்!

இந்தியாவின் உதவியை எதிர்பார்த்து மேலும் காலத்தை வீணடிக்க வேண்டாம்!

நாளுக்கு நாள் இலங்கையில் தமிழர்களுக்குற்ற கொடுமைகள் மிகுந்து வருகின்றன. ஏனென்று கேட்க, உலகில் எந்த அரசும் முன்வரவில்லை. உலக ஒன்றியப் பேரவையும் தனக்கிருப்பது ஊமை அதிகாரமே என்பதை மெய்ப்பித்துக் கொண்டுள்ளது. தமிழீழத்தில் உள்ள தலைவர்களோ ஆளுக்கொரு நாடாகச் சென்று, அங்கு நாள்தொறும் விழுகின்ற பிணங்களைக் கணக்குக் காட்டி, உதவி என்கின்ற பெயரால், தங்கள் மடிகளையும் வயிறுகளையும் நிரப்பிக் கொண்டுள்ளனர். மேனிலையில் எத்தனைப் பேர்கள் உள்ளனரோ, அத்தனைத் தலைவர்களும் சென்னையிலும், மதுரையிலும், திருச்சியிலும், தில்லியிலும் தங்கள் இருப்பிடங்களை அமைத்துக் கொண்டு, நாள்தோறும் ஓர் அறிக்கையைத் தங்கள் தங்கள் இயக்கங்கள் பெயரால் செய்தித் தாள்களில் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் தமிழகத்தில் ஒவ்வொரு பிழைப்பைத் தேடிக் கொண்டு, நிலையாகவே இங்குத் தங்கிவிடத் தீர்மானித்து விட்டனர்.

இந்நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கமும் ஈழப் புரட்சி அமைப்பும், தமிழீழ விடுதலை இயக்கமும், ஈழமக்கள் விடுதலை முன்னணியும் ஒன்று சேர்ந்துவிட்டதாகச் செய்தித்தாள்களில் அறிக்கையும் படங்களும் வருகின்றன. இன்னும் முகாமையான இயக்கங்கள் ஒன்றுசேர்வது பற்றி எச் செய்தியும் இல்லை. ஒன்றிணைந்தவர்கள் மற்றவர்களைச் சேர்த்துக் கொள்ளவில்லையோ அல்லது மற்றவர்கள் இவர்களுடன் ஒன்றுசேர மறுக்கிறார்களோ தெரியவில்லை. **இந் நிலையில் அனைத்து இயக்கங்களைச் சேர்ந்த இளைஞர்களும் மன இறுக்கமாகவே உள்ளதாகத் தெரிகிறது. இந்த நிலை மிகமிக வருந்தத்தக்கது.**

ஏற்கனவே கூட்டணித் தலைவர்கள், இந்திராகாந்தியினுடைய சூழ்ச்சிக்கு ஆட்பட்டுப் பார்த்தசாரதியின் பேச்சுரை நாடகத்தாலும், வட்டமிசைக் கூத்தாலும், காலத்தை மிகவும் தள்ளிப்போட்டு, சிங்கள ஆட்சியின் கை மிகவும் வலுப்பெறும்படி இடங்கொடுத்துவிட்டார்கள். இன்றோ இவ்விளைஞர்கள் இராசீவ் காந்தியை நம்பிக்கொண்டு இருப்பதாகத் தெரிகிறது. இதை வி— அறியாமை வேறொன்றும் இருக்க முடியாது.

ஆரிய இனம் தமிழர்களுக்கு என்றுமே உதவியதாக வரலாறில்லை. வடவாரிய இனத்தவர் சிங்கள ஆரியர்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டுத் தமிழினத்தைக் காப்பார்கள் என்பதை வரலாறறிந்த எவருமே ஒப்புக்கொள்ள மாட்டார்கள். எனவே, தமிழீழ விடுதலைக்கு இந்தியா ஒருபோதும் உதவாது. அவ்வாறு ஒருவேளை அதன் உதவி காலத்தாழ்ச்சியாகக் கிடைத்தாலும், அது தமிழீழத்திற்கு எவ்வகையிலும் நன்மை பயக்காது. இதை எல்லாரும் கல்மேல் செதுக்கி வைத்துக் கொள்ளலாம். இந்திரா காலத்திலிருந்தே, அமிர்தலிங்கத்திற்கும், அவரையொத்த அரசியல் நன்மை நாடிகளுக்கும் நாம் தெள்ளத் தெளிவாகக் கூறிவருவது இது.

எனவே, தமிழீழ விடுதலையை விரும்பும் இயக்கப்போராளிகள் அனைவரும் இனியேனும், இவ்விறுதிக் காலத்திலேனும், தங்கள் மன இறுக்கங்களைத் தளர்த்திக் கொண்டு, அல்லது தவிர்த்துக் கொண்டு, அனைவரும் ஒன்றிணைந்து சிங்கள இனஅழிப்புக்கெதிரான முயற்சிகளைச் செய்து, தமிழினத்தைக் காக்கவும், தமிழீழத்தை வென்றெடுக்கவும் வேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம். **மற்றபடி இந்தியாவின் உதவியை எதிர்பார்த்து மேலும் காலத்தை வீணடிக்க வேண்டாம்.** இவ்விக்கட்டான நேரத்தில் இராசீவ்காந்தி அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவிற்கும் வெளிநாட்டுச் செலவு மேற்கொண்டதே, தமிழீழச் சிக்கலைப் புறக்கணிக்கவே ஆகும் என்பதை அரசியல் பார்வையுள்ளவர்கள் நன்கு விளங்கிக் கொள்ளலாம். **தமிழீழ மறவர்கள், தம்பி பிரபாகரனும், தம்பி முகுந்தனும் ஒன்று சேர்ந்தால் அனைத்தும் சரியாகிவிடும் என்று மனமார நம்புகிறோம். நம் அன்றைய வேட்கையும் இதுதான்! இன்றைய வேண்டுகோளும் இதுதான்!** இல்லெனில் இந்தியாவை நம்பி இவர்கள் இலவு காத்த கிளிகளாகப் போக வேண்டியிருக்கும் என்று அன்புடன் கூறிக் கொள்கிறோம். 0

விடுதலை மறவர்கள் ஒன்றிணைந்து போராட முன் வருக!

நமீபியாவில் (Namibia) என்ன நடக்கிறது?

"ஒடுக்கும் தேசிய இனத்திடமிருந்து ஒடுக்கப்படும் தேசிய இனம் பிரிந்து செல்வதை ஆதரிக்காத ஒருவன் மார்க்சிய - சிந்தனையாளன் அல்லன் - அவன் ஒரு மக்கள் நாயக அமைப்பினனாகவும் இருக்கமுடியாது". -இலெனின்.

நிலவியல் அமைப்பு ..

ஆப்பிரிக்காவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள நமீபியா நாட்டின் வடக்கே அங்கோலாவும், தெற்கே தென்னாப்பிரிக்காவும், கிழக்கே பொட்சுவானாவும், வடகிழக்கே பொட்சுவானாவையடுத்துச் சாம்பியாவும், மேற்கே அட்லாண்டிக் பெருங்கடலும் எல்லைகளாக உள்ளன.

நாட்டின் பெரும்பகுதி வெற்று நிலங்களாக் அங்கு இருக்கின்ற போதிலும், வைரம், யுரேனியம், செம்பு, தகரம், ஈயம் போன்ற கனிவளங்கள் மிகுதி.

3,18,000-சதுர கற்கள் கொண்ட அந்நாட்டின் மக்கள் தொகை 14 இலக்கமாகும். ஓவாம்போ (Ovombo), டமாரா (Damara), நாமா (Nama), கெரரோ (Herero) போன்ற முகாமையான இன மக்கள் அங்கு பெரும்பகுதி வாழ்கின்றனர். ஆங்கில வல்லாளுமையரின் குடியிருப்பு வல்லாண்மைக்கு முன்பாக அந் நாட்டு மக்கள் உழவுத்தொழில், கால் நடை வளர்ப்பு, குடிசைத்தொழில் இவற்றையே செய்து கொண்டிருந்தனர்.

அரசியல் மாறுதல்கள்...

முதலில் செருமனி 1890-ஆம் ஆண்டு. நமீபியாவைக் கைப்பற்றி அடிமைப்படுத்தியது. செருமானிய அடக்குமுறைக்கு எதிராக 1904-1908-ஆம் ஆண்டுகளில் நமீபிய கறுப்பின மக்கள் போராட்டங்களை நடத்தினர். ஆனால் அப்போதைய செருமானிய மன்னன், கெய்சர் (Kaiser), பெரும் தொகையான செருமானியத் துருப்புகளை அனுப்பிப் பல இலக்கம் நமீபிய நாட்டு மக்களைக் கொன்று, இவ்வெழுச்சிகளை அடக்கினன். ஆனால் இக்கால கட்டத்தில் தென் ஆப்பிரிக்காவைக் கைப்பற்றி, ஆட்சி செய்த ஆங்கிலேயர் நமீபியாவையும் கைப்பற்றும் நோக்கத்தோடு, தென ஆப்பிரிக்கத் துருப்புகளைப் பயன்படுத்தி, 1915,ஆம் ஆண்டு, நமீபியாவைத் தம்முடன் வலுக்கட்டாயமாக இணைத்துக் கொண்டனர்.

முதலாம் உலகப்போரின் இறுதியில், அனைத்துத் தேச அவையில் முகாமை நாடுகளாக இருந்த அமெரிக்காவும், இங்கிலாந்தும் நமீபியாவை ஆளுமை செய்யும் பொறுப்பைத் தென் ஆப்பிரிக்காவிடம் கொடுப்பதெனவும், அனைத்துத் தேச ஆளுமை அவையின் கீழ் நமீபியா இருக்குமெனவும் அறிவித்தன. அந்நிலையில் வெள்ளை இனவெறி கொண்ட தென் ஆப்பிரிக்காவிடம் ஆட்சி ஒப்படைக்கப்பட்டதும், தென்னாப்பிரிக்காவிற்கே உரிய (Aparthied) 'அப்பதையிட்' இன வெறிக் கொள்கையை மிகக்கேடான முறையில் நடைமுறைப் படுத்தியது. கறுப்பர்கள் வாழ்ந்து வந்த கனிவளப் பகுதிகளிலிருந்து, நமீபியா மக்கள் குடிபெயர்க்கப்பட்டு, மக்கள் வாழமுடியாத ஒதுக்குப் புறச் சேரிகளில் குடியேற்றப்பட்டனர்.

தென் ஆப்பிரிக்க இனவெறி அரசு, 1946 இல் நமீபியாவைத் தனது மாநிலமாக இணைத்துக்கொள்ள உலக ஒன்றிய அவையில் கேட்க, அதற்குப் பல நாடுகள் எதிர்ப்பு தெரிவித்தபோதிலும், வலுக்கட்டாயமாக நமீபியாவைத் தமது ஆருவது மாநிலமாக தென்னாப்பிரிக்கா இணைத்துக்கொண்டது.

எழுச்சிப் போராட்டங்கள்...

தென்னாப்பிரிக்க இனவெறி அரசுக்கு எதிராக முதலில் விடுதலை இயக்கங்கள், 1950-இன் பிற்பகுதியில் ஓவோம்போ நகரில் தோன்றலாயின. 1958-இல் அப்போங்கு நிலையின் மலர்ச்சியாக (Ovombo Land People Organization)O P.O -'ஓவோம்போ மக்கள் கழகம்" எனும் பெயரில் சுரங்கத் தொழிலாளர், இளைஞர்கள், மாணவர்களை இணைத்து இக் கழகம் தொடங்கப்பெற்றது.

நமீபிய மக்களின் தேசிய விடுதலையைத் தனித்த ஒரு பகுதி மக்களின் போராட்டத்தினால் மட்டும் வென்றெடுக்க முடியாது என்றுணர்ந்த நமீபியா மக்கள், 1959-ஆம் ஆண்டு மே மாதத்தில், தென் மேற்கு ஆப்பிரிக்க தேசிய முன்னணி (South west African National Union) ஒன்றை அமைத்தனர். இவற்றைத் தென்னாப்பிரிக்க அரசு மதிக்காதது மட்டுமல்லாமல் கடுமையாக ஒடுக்கியது.

இந்நிலையில் மென்மையான போராட்டங்கள் வழி விடுதலை பெறமுடியாது என உணர்ந்த நமீபிய மக்கள், 1960-ஆம் ஆண்டு, ஏப்பிரல் மாதம் 19-ஆம் நாள், தென்மேற்கு ஆப்பிரிக்க மக்கள் இயக்கம் (South West African Peoples Organization) (SWAPO) ஒன்றைக் கட்டினர், இவ்வியக்க வளர்ச்சிக்கு, முன்னோடியான பல இயக்கங்களும் உதவின, ஒன்றிணைந்தன,

அவ்வகையில் புதிதாக உருக்கொண்ட 'சுவாப்போ' இயக்கம் தன் வேலைத் திட்டத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டது

1, நமீபிய மக்களின் தேசிய விடுதலையை வென்றெடுத்து ஒரு மக்கள் நாயகக் குடியரசை நிறுவுதல்;
2. அரசியல், பொருளியல், குமுகவியல் துறைகளில் உண்மையான, முழுமையான விடுதலையை வென்றெடுப்பது;
3. தேசிய விடுதலைப் போராட்டத்தைக் கூர்மைப் படுத்தி, விரிவுபடுத்தும் நோக்கில் மக்கள் நடுவில் தேசியப் பற்றுணர்வையும், அரசியல் விழிப்புணர்வையும் தட்டி எழுப்புதல்.
4. தேசிய விடுதலைப் போராட்டத்தில் மக்களை நேரடிப் பங்களிப்புச் செய்யும் நோக்கில் பரந்துபட்ட வெகுமக்கள் அமைப்பு வழியாக அணி திரட்டுவது.
5. அறிவியல் அடிப்படையில் சமவுடைமை நெறியமைப்புக்குகந்த மெய்ம்மக் கோட்பாட்டிற்கிணங்க பிரிவுகளற்ற, சுரண்டலற்ற, ஒரு புதிய புரட்சிக் குமுகாயத்தைத் தட்டி எழுப்புதல். இந்த இலக்கை வெற்றியோடு நிறைவேற்றும் நோக்கில் தொழிலாள, உழவுப் பிரிவுகளின் அடிப்படைகளை எடுத்து இயம்பும் ஒரு முற்போக்கான, புரட்சி நிலையிலான முன்னணித் தலைமையை உருவாக்குதல், (Swapo-Political programme-1976).

கருவிப் போராட்டத்தில்....

பரந்துபட்ட வெகு மக்களை அணி திரட்டி ஒரு தேசிய இயக்கமாகத் தன்னை நிறுவிக்கொண்ட போதும், குடியிருப்பு அமைப்புநிலை ஒடுக்குமுறையிலிருந்து விடுதலையை முன்னெடுப்பதாயின், அது கருவிப் போராட்டம் மூலமாகவே இயலும் என்பதை சுவாப்போ' இயக்கம் உணர்ந்துகொண்டது.

இந்நிலையில் தென்னாப்பிரிக்க இனவெறி அரசும் மிகவும் மாந்தத் தன்மையற்ற முறையில் கருவி வழி அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டு நமீபிய மக்களைக் கொன்று குவிக்கவே, அம் மக்கள் விடுதலைப் படை (Peoples Liberation Army of Namibia)-PLAN-என்ற அமைப்பை உருவாக்கினர்.

1966 ஆண்டளவில் நமீபிய விடுதலைப் போராட்டம், கருவிப் போராட்டமாக முழு வளர்ச்சி பெற்றது. தொடக்கத்தில் ஓவோம்போ நகரில் வளர்ந்துவிட்டிருந்த போராளிகளின் அமைப்பு, பல தாக்குதல்கள் நடத்தியதன் காரணத்தால், தென் ஆப்பிரிக்க இனவெறி அரசின் கொடுமைகளுக்கு ஆளாகவே விரைந்து அனைத்துப் பகுதிகளிலும் வளரத் தொடங்கியதோடு, விடுதலை பெற்ற அங்கோலா நாட்டிலும் தன் படைத்தளங்களை ஏற்படுத்தியது. இது கண்டு தென்னாப்பிரிக்கா எரிச்சல் கொண்டு, 1980, 1981, 1982, 1983-ஆம் ஆண்டுகளில் அங்கோலா மீது தாக்குதல்களை நடத்தி, அங்கோலாவின் தென்பகுதியிலிருந்த 'ஓவோம்போ' வினரைத் தாக்கிக் கொன்றது.

அதுபொழுது அங்கோலாவின் சமநெறிக் குடியரசமைப்பிற்கு இழுக்குத் தேடித் தரவேண்டும் எனும் நோக்கில், தென் அங்கோலாவில் பரவியிருந்த யூனிட்டா (Unita) என்ற அரசுக் கெதிராக போராட்டம் நடத்தி வரும் இயக்கத்தைத் தூண்டி, அதற்குத் துணை நின்றதோடு, 'ஓவோம்போ' வினரையும் அழிக்கக்கேட்டுக் கொண்டது தென்னாப்பிரிக்கா இனவெறி அரசு.

பல்முனைத் தாக்குதல்களால் பொருளியல்சீரழிவுக்குட்பட்ட அங்கோலா, 'சுவாப்போ' இயக்கத்தினருக்குத் தான் புகலிடம் கொடுப்பதில்லை எனும் நிலையில தென் ஆப்பிரிக்காவோடு, 1984-இல் உடன்படிக்கை செய்து கொண்டதோடு அமைந்துவிட்டது.

இந்நிலையில் ஏதிலிகளாக்கப்பட்ட நமீபிய விடுதலைப் போராளிகள், தங்கள் தாய் நாட்டிலேயே நின்று போராடத் துணிவு பெற்றதைக் கண்டு, கூட்டுச் சேரா நாடுகள் சார்பில் அதன் விடுதலைக்காக ஒத்துழைப்புத் தருவது அந் நாட்டு மக்களுக்கு முழுத் தென்பாகவும், உறுதியாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

— 'விடுதலைப் புலிகள்' இதழிலிருந்து.

சாரவுணவு (சத்துணவு) ஓர் ஆய்வு!

தமிழ்நாடு அரசால் நடைமுறைப் படுத்தப்பெற்றுச் செயலாக்கப் பெற்று வரும் சாரவுணவு பற்றி ஆய்வு செய்ய வேண்டியது இப்போதுள்ள தேவையாகின்றது. சாரவுணவு என்னும் திட்டம் எப்படிக் கல்வித் துறையில் புகுந்து, குழந்தைகளின் கல்வி வளர்ச்சியைச் சீரழிந்து வருகின்றது என்பது சிலருக்குத் தெரிந்தும், பலருக்குத் தெரியாமலும் இருக்கிறது.

நாட்டு மக்களிடம் ஒப்போலைகள் பெற்று மீண்டும் மீண்டும் ஆட்சியில் அமரவேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டம் தீட்டப்பெற்றது. காமராசரால் கொண்டு வரப்பட்ட பகல் உணவுத் திட்டத்திற்கும், இன்றைய அரசால் கொண்டு வரப்பெற்ற சாரவுணவுத் திட்டத்திற்கும் அடிப்படை ஒற்றுமைகள் இருந்தாலும் பல வேற்றுமைகள் உள்ளன.

கட்சி வேறுபாடு கருதாது நடுநிலையோடு ஆராய்ந்தால் இன்றைய சிற்றூர்ப்புறக்கல்வி வளர்ச்சியில் இஃது எந்த அளவிற்கு மண்ணை அள்ளிப் போடுகிறது என்பது தெரியவரும். ஏழைக் குழந்தைகளின் வயிற்றுப் பசி தீர மட்டும் கொண்டுவந்த காமராசரின் திட்டம், பள்ளிப் பிள்ளைகளைக் கல்வியில் நாட்டம் கொள்ள வைத்தது. அந்தத் திட்டத்தில் அதிகமான கொள்ளையடிப்பு ஊழல் இன்ன பிற நடக்கவில்லை. மாறாகச் சிற்றூர்ப் புறங்களில் பொருளியலில் மிகவும் பின்னடைந்துள்ள குழந்தைகள் அப்பயனை நுகர்ந்து கல்வியில் நாட்டம் செலுத்தினர். அறிவு வளர்ச்சி பெற்று பல்துறை வல்லுநர்களாயினர். ஆனால் இன்று நடப்பது என்ன? சராவுணவுத் திட்டத்தில் எல்லாரும் பயன் பெறுகின்றனர். ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லாரும் பயன் அடைகின்றனர். ஆசிரியர்களும் சாப்பிடுகின்றனர். சாரவுணவுப் பொறுப்பாளர்கள் ஆக எல்லோரும் சாப்பிட்டுப் பயனைத் துய்க்கக் கூடிய ஓர் உணவு நிலையமாகவே ஒவ்வொரு பள்ளியும் செயல்பட்டு வருகின்றது. சாரவுணவைச் சாப்பிடாது, கீழே கொட்டி மலைபோல் குவிந்து, நாய்கட்கு மட்டுமே உணவாகின்றது. பள்ளிகளில் நேரில் சென்று பார்த்தால் உண்மை விளங்கும். சாரவுணவுக்கான பொருள்களைத் தங்கள் சொந்த வீட்டிற்கு எடுத்துச் செல்வதில், பொறுப்பாளர்கட்கும், தலைமை ஆசிரியர்-மற்ற ஆசிரியர்க்கும் போட்டி நிகழ்கின்றது. சாரவுணவுத் திட்ட பொறுப்பாளர்கள், பணிக்கு வருமுன்பு இருந்த எடையையும், வந்து பணியாற்றிக் கொண்டிருக்கும் இப்போது இருக்கும் எடையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும். சிற்றூர்ப் புறங்களில் உள்ள பொறுப்பாளர்கள் மற்றவாகளை எரி பொருள்களில் இருந்து, காய்கறி வரை வீடுகளில் இருந்து கொண்டு வரச் சொல்கின்றனர். பிள்ளைகளையும் அப்பணிக்குப் பயன்படுத்துகின்றனர். பின்னர் எப்படிப் பிள்ளைகள் கல்வியில் அறிவு வளர்ச்சி பெறமுடியும்? தங்கள் பிள்ளைகளைச் சோற்றுக்காக மட்டுமே அனுப்பும் பெற்றோர்களிடம் எப்படிப் பிள்ளைகளின் கல்விவளர்ச்சியை எதிர்பார்க்க முடியும்? வீட்டில் உணவில்லா விட்டாலும் பள்ளியிலாவது உணவு கிடைக்கின்றதே என்ற ஒரு கரணியத்திற்காக மட்டும், குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகின்ற பெற்றோர்களையே இப்போது அதிகம் பார்க்க முடிகிறது. வேலை வெட்டி செய்யாது சோம்பித் திரியும் ஆடவர்கட்கு, இஃது ஒரு நல்ல வாய்ப்பாகப் போயிற்று. அறைகுறைச் சம்பாதனையைக்கொண்டு, தன் வயிற்றைக் குடியால் நிரப்ப விட்டுக் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பிச் சாப்பிடச் சொல்லிவிட்டு, மனைவி திரைப் படத்தைப் பார்த்து, அதுவே அன்றாட வாழ்க்கை என்று நிறைவடைந்து விட்டு, நாளைக் கழிப்பதுதான் இன்றைய தமிழ்க் குடும்பங்களின் அவலநிலையாக போயிற்று.

சிற்றூர்களில்தாம் பெரிய பெரிய அறிஞர்கள் தோன்றினர். சிற்றூர்களில் இருந்து படிப்போரிடம் தாம் சிறந்த அறிவாற்றல் இருந்தது. ஆனால் இன்று சிற்றூர்ப்புறம், சாரவுணவாலும் திரைப்படத்தாலும் கெட்டுக் குட்டிச் சுவராகி வருகின்றது. கல்வி என்பது இன்றைக்கு முப்பதாண்டுகட்கு முன்பு யாருக்குச் சொந்தமாக இருந்ததோ, யார் அதன் பயனை நுகர்ந்து, அலுவலகங்கள் தோறும் நுழைந்து கொட்டமடித்தார்களோ, அவர்கள்தாம், அவர்கள் மட்டும்தாம் மறுபடியும் கல்வியைச் சொந்தமாக்கி வருகின்றார்கள். அந்தக்காலம் இன்று தொடங்கி விட்டது. அதற்குச் சாரவுணவு ஒரு கரணியமாக ஏன் வழியாகவே அமைந்துவிட்டது. மறுபடியும் தாழ்த்தப்பட்ட-பிற்படுத்தப்பட்டோருக்குக் கல்வியென்பது எட்டாக்கனியாகி, மீண்டும் குலக்கல்வி திட்டத்திற்கு வழி செய்யப் போகின்றது,

— மெய் அருண்மொழியன்.

தேசிய இன விடுதலைக்குப் போராடுவோம்!

தமிழீழ அரசியலில், அகப்புற அழுத்தங்கள்!

— "குண" —

முரண்பாடுகள் புரையோடிய நிலையில் ஒரு விளக்கமும் விடிவும் கண்ணுக்கு உடனே எட்டுவது அரிது. இத்தகைய விளக்கத்தைக் காண தமிழீழப் புரட்சி ஒரு பேறுகாலப் பெருவலியில் துடித்துக்கொண்டிருக்கிறது. ஆங்கிலத்தில் to cut the Gordian knot* எனச் சொல்வார்களே அதைப்போன்ற செயற்கரிய செயலாற்றித் தமிழகத்தின் அரசியலின் மீதும் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் நிலையில் தமிழீழப் புரட்சி வளர்ந்துவருகிறது. தமிழீழம் மலர்வது காலத்தின் தேவை. ஆயினும், அத் தமிழீழத்தில் புரட்சி எந்த மட்டுக்குத் தனைத்தானே உறுதிப்படுத்திக் கொள்ளும் என்பது காலத்தால் விளங்கும். தமிழீழப் புரட்சிக்கு இரண்டு முகப்புகள் உண்டு. ஒன்று-சிங்கள இனவெறி கொடுங்கோன்மையைத் தூக்கி எறிந்து தமக்கென ஒரு விடுதலையையும், அரசையும், ஆட்சியையும் அமைத்துக் கொள்ளல்; மற்றது-பெற்ற விடுதலையையும், அரசையும், அதன் இறைமையையும் கட்டிக்காத்துக் கொள்ளல்.

இவற்றில் முதலில் சொன்ன கூற்றைப் பற்றி பின்னர் சிறிது விரிவாகப் பார்ப்போம். அதற்கு முன்னர், இரண்டாவது கூற்றைப் பற்றிச் சிறிது தொட்டுக்காட்டத்தான் வேண்டும். தமிழீழ விடுதலைப் புரட்சி எத்தகைய மாற்று வாழ்வியலைத் தமிழீழ மக்களுக்கு அமைத்துத்தரும் என்னும் கேள்வியைத் தழுவியதாகவே அந்தக் கூறு இருக்கின்றது.

தமிழீழ விடுதலை இயக்கங்கள் யாவும், விடுதலைப் புரட்சிக்குப் பின்னர் ஓர் ஒப்புரவு (சோசலிச) வாழ்வியலை அமைத்துக்கொள்ளப் போவதாக அந்தக் கேள்விக்கு விடையளிக்கின்றது. விரிவான ஒரு மாற்றுப் பொருளியலை அமைத்துக் கொள்ளாத நிலையில்-அதற்கும் மேலாக, அத்தகைய மாற்று வாழ்வியலை உறுதிப்படுத்திக் கொள்ளவல்ல ஒப்புரவு உளப்பாட்டை மக்கள் வளர்த்துக் கொள்வதற்கு முன்னர்-உருசியாவின் பாட்டாளி மக்கள் ஆட்சியைக் கைப்பற்றிச் சோவியத்து ஆட்சியை அமைத்துக்கொண்டனர். முதலாம் உலகப் போரின் சூழலும், உலக முதலாளிய வல்லரசுப் பொருளியலில் ஏற்பட்ட விரிசல்களும், வளர்ச்சிகளும் அந்த உருசியப்புரட்சியை வரலாற்றின் பெருந்தேவையைத் தழுவிய ஒரு வாய்ப்பாக மலரச் செய்தன. குமுகிய ஊழின் (necessity) பாற்பட்ட ஒரு தற்செயல் (chance) நிகழ்வு அஃதாகும். ஒரு மாற்றுத் தொழிற் கொள்கை அன்றைய உருசியப் பாட்டாளிய ஆட்சிக்கு இல்லாத நிலையில், மேலை முதலாளிய பாணியைத் தழுவிய பெருந்தொழிற் கொள்கையே புதிய உருசியாவின் பொருளியல் மீட்சிக் கொள்கையாகியது. அதையொட்டியே புதிய உருசியாவின் பொருளியல் அமைந்தது. அதனால், வேளாண்மையைப் புறக்கணித்து வளர்ந்த ஒருதலையான பெருந்தொழில் எந்திர மயமாக்கக் கொள்கை மேலோங்கியது. உழவுத் தொழிலைக் கூட்டுறவு மயமாக்குவதில் பல குழப்பங்கள் விளைந்தன. நெருக்கடி முற்றியது. இடையில், அந்தப் புனிற்றுநிலை ஒப்புரவு வாழ்வியலின் மீது மற்றோர் உலகப்போர் திணிக்கப்பட்டது. அப்போரிலிருந்து மீண்ட அன்றைய சோவியத்துஆட்சி, பின்னர் தன்னையே ஒரு வல்லரசாக மாற்றிக் கொண்டதன் வாயிலாகத் தன்னுடைய பொருளியல் மீட்சியை நிலைப்படுத்திக் கொண்டது.

பின்னர், சீனப் புரட்சி வந்தது. இரண்டாம் உலகப்போரில் தன்னை ஒரு தேசிய விடுதலை இயக்கமாக உயர்த்திக்கொண்டு, அச் சீனப்புரட்சி வாகை சூடியது. ஆட்சியைக் கைப்பற்றியது. எத்தகைய மாற்று வாழ்வியலை அமைத்துக்கொண்டு ஒப்புரவு நெறியை வளர்த்துக் கொள்வது என்னும் சிக்கல் அதற்கும் உருவானது. முதலில் சோவியத்துப் பாணி பொருளியலை இறக்குமதி செய்துப் பார்த்தது. அந்தச் சட்டை சீன வாழ்வியலுக்கும்-சூழலுக்கும் பொருந்தவில்லை. ஆனால், உழவைத் தழுவித் தொழிலை தலைமையாகக் கொண்டு ஒரு துப்புரவு வாழ்வியலை வளர்த்துக் கொள்வதென்னும் புதிய விளக்கத்தைக் கண்டது. உழவு, சிறுதொழில், பெருந்தொழில் என்னும் திசையில் ஒரு தற்காப்பு பொருளியலைக் சுட்டிக்கொள்ள முயன்றது. அதற்குத் தடையாக இருந்த நிலக்கிழமை முதலாளிய எச்சங்களையும் நலன்களையும் ஒழித்துக் கட்ட ஒரு பண்பாட்டுப் புரட்சியை அச் சீனம் நாடியது. அந்தப் பண்பாட்டுப் புரட்சியில் எழுந்த இடதுசாரித் தவறுகளால் மீண்டும் தலையெடுத்த முதலாளிய நலன்கள் ஓர் எதிர்ப்புரட்சி வழியாக ஆட்சியைக் கைப்பற்றி, மாவோவின் சீரிய கொள்கைகளை எதிர்த்த வண்ணம் சீனப் புரட்சியை இன்று தடம் புரட்டிவிட்டுள்ளன. இந் நிலையில், தமிழீழப் புரட்சி போன்ற விடுதலை இயக்கங்கள் சீனத்தால் இன்று வஞ்சிக்கப்படவும் பார்க்கிறோம்.

சோவியத்து, சீனம் போன்ற மாபெரும் புரட்சிகளே இன்று சரியானதோர் ஒப்புரவு நெறியை தேர்ந்தெடுத்துக் கொள்ளாமல் உலகப் பாட்டாளிய நலன்களை கைவிட்டு விட்டு இருக்கின்ற நிலையில், தமிழீழப் புரட்சி மட்டும் முன்கூட்டியே ஒரு மாற்றுப் பொருளியலுக்கான ஆழமும், விரிவும், நுட்பமும் செறிந்த ஒரு திட்டவட்டமான திட்டத்தை வைத்துக்கொண்டுதான் விடுதலை வேண்டிப் போராட வேண்டுமெனச் சொல்வது சரியாவென சிலர் கேட்கலாம். சிங்கள இனவெறி அரசு தமிழீழத் தமிழர்களையே பூண்டோடு ஒழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிற நிலையில், தமிழினம் தன்னிலத்தான் தற்காத்துக் கொள்வதே முதற்பெரும் நோக்கமென அவர்கள் அடித்துக் கூறலாம். எரிகின்ற வீட்டை முதலில் அணைக்கவேண்டும்; பின்னர்தான் அதைத் திருத்திக் கட்டவேண்டுமென சிலர் சொல்லலாம். எரிவதை அணைப்பது என்பதும், புரட்சியை செய்வதென்பதும் ஒன்றேபோல் வேறானவை. தீயை அணைப்பதற்கு ஆட்களும், தண்ணீரும் மட்டும் தேவை. ஆனால், புரட்சிக்கோ ஒரு குமுகப் பொருளியல் திட்டமும், அத் திட்டத்தை வகுக்கவும், செயல்படுத்தவும் வல்ல நல்ல முறையியலும் (Methodology) புரட்சி அமைப்பும் தேவை. இத்தகைய குமுகியக் கூறுகள் இன்றி, தமிழீழப்புரட்சி ஆட்சியைக் கைப்பற்றினாலும் பின்னர் நிலைக்க முடியாது. அத்தகைய ஆக்கங்கள் நிறைந்த ஒரு திட்டத்தை வகுத்துக்கொள்ள உதவவல்ல இடுபொருட்களாக (Raw Materials) உருசியா, சீனம், வியத்நாம், கியூபா போன்ற பாட்டாளிய புரட்சிக்குப் பிந்திய குமுகங்களின் வெற்றிகளும்-தோல்விகளும் விரிந்த பட்டறிவுகளாக அவர்கள் முன்னால் விரவிக் கிடக்கின்றன. அவற்றில் செரிப்பதைச் செரித்துக் கொண்டு, கழிப்பனவற்றைக் கழித்துவிட்டுத் தமிழீழ மக்கள் புரட்சி தனக்கேயுரிய தற்சார்பு நிலையையும் ஒப்புரவு குமுக உளவியலையும் உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டுமென்னும் எதிர்பார்ப்புடன் முதலில் சொன்ன முதற் கூறுக்குப் போவோம்.

தமிழீழம் விடுதலை பெற்ற ஓர் அரசையும் ஆட்சியையும், இறைமையையும் அமைத்துக் கொள்வதைப் பற்றியதே அஃதாகும். இந்த முதற் கூட்டத்தில் தமிழீழத்திற்குப் புறத்திலும் அகத்திலும் விளங்குகின்ற சில பெரிய நலன்கள் (Interests) நன்றாகத் தெரிகின்றன. அத்தகைய பெரிய அகப்புற நலன்களைப் பின்வருமாறு அலசலாம்:

1. இந்திய அரசு,
2. அமெரிக்க - பிரித்தானிய - சீன - இசுரேலிய சியோனிய அணி,
3. உருசியா;
4. பவுத்தத்தை முதன்மைப்படுத்துகின்ற சிங்கள இனவெறி,
5. அமெரிக்க அடிவருடிச் செயவர்த்தனாவின் சிங்கள இனவெறி,
6. சோவியத்து - இந்தியச் சார்பு திருவாட்டி பண்டாரநாயகாவின் சிங்கள இனவெறி;
7. தமிழீழத்தில் மேல் சாதி நலன்களை அடிப்படையாகக் கொண்ட மேட்டுக்குடியில் பிறந்த தரகு முதலாளியம்;
8. தமிழீழ விடுதலையை வைத்து அரசியல் ஆதாயம் தேடுகின்ற தமிழகத்தில் இருக்கின்ற முதலாளியத் தேசிய கட்சிகள்.

இத்தனை நலன்களும் தமிழீழ மக்களின் நலன்களை பகடைக் காய்களாக வைத்து அரசியல் சூதாடப் பார்க்கின்றன. இனி அவற்றைத் தனித்தனியாக எடுத்துக்கொண்டு அவற்றின் இலக்கணங்களையும், நோட்டங்களையும், சூழ்ச்சிகளையும் சுருங்க ஆய்வுக்கு உட்படுத்துவோம்.

—(தொடரும்)

* பண்டைய ஃபிரிஃசியா நாட்டு அரசன் கார்டியசு (Gordius) வகுத்திருந்த ஒரு சிக்கலான முடிச்சை வெட்டுதல் என்னும் பொருளில் வழங்குகின்ற மரபு வழக்கு.

முற்றுளுமை நாட்டின் முழுதாளும் எண்ணம்!

இந்தியாவிற்கு கிழக்கே வங்காள நாட்டு சிட்டகாங் அருகே உள்ள 'செயிண்ட் மார்ட்டின்சு தீவு, மேற்கே பாக்கித்தான் நாட்டுக்-கராச்சி, தெற்கே இலங்கை, தமிழீழப்பகுதி திருகோணமலை அம்மூன்று இடங்களிலும் அமெரிக்கா தனது போர்க் கப்பல்களுக்கு கண்ணெய் போட்டுக்கொள்ள ஏந்துகள் உள்ளனவாம். பிடி கொடுக்காது ஒருக்கும் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளைக் கையகப்படுத்தி ஆட்டுவிக்க, சுரண்ட அமெரிக்கா பல வழிகளிலும் முயல்கிறது. அமெரிக்கப் படைத் தலைமையகமான பெண்டகன் 'இலங்கையில் நமக்குப் போர் ஏந்துகள் செய்துதரும் துறைமுகம் உள்ளது' என்றறிவித்துள்ளது. மூன்று கோண வடிவில் இந்தியாவை வளைக்க முற்றுளுமை அமெரிக்கா முனைப்போடு உள்ளது. 'திகோகார்சியா' விலும் படைப் பெருக்கத்தை வலுவுபடுத்தியுள்ளது. அடக்கி ஆளும், ஆள நினைக்கும் அமெரிக்கப் புற ஆளுமை (அக ஆளுமை இந்தியா) எண்ணத்தை முறியடிக்க 'தமிழீழம்' அமைவதே தீர்வானது.

தென்னாப்பிரிக்க இந்தியர்கள் தாக்கப்பட்டபோது 'உலக ஒன்றிய அவை'யில் இந்தியா தலையிட்டது. அதுபோழ்து தென்னாப்பிரிக்கப் படிநிகராளி (பிரதிநிதி) 'இந்தியா உள்நாட்டுச் சிக்கலில் தலையிடுகிறது' என்ற எதிர்ப்புத் தெரிவித்தார். நமது(!) இந்தியப் படிநிகராளி 'உள்நாட்டுச் சிக்கல் என்பது உங்கள் கட்சிச் சிக்கலில் தலையிடுவதுதான். ஆனால், மாந்த அடிப்படை உரிமை பறிக்கப்படுகிறது. எனவே, அஃது உள்நாட்டுச் சிக்கலாகாது' என்று விடை சொல் வழக்கு முற்றி மேல் நடுவர் குழுவுக்கு விடப்பட்டபோது, 'இந்தியா தலையிட்டது சரிதான்' என்று தீர்ப்புக் கிடைத்தது. இதை இங்குள்ள தேசிய நீரோட்டங்கட்கு நினைவுபடுத்தி, உண்மை உணர்ந்து, 'தமிழீழம்' உருவாக்கத்திற்கு, உறுதுணை செய்யுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

— தாரை-தமிழ்வென்றி,

இவர்களா தமிழர்கள்?

முன்னாள் பெருமையினை
முழக்கிப் பறையடிக்கும்
இந்நாள் தமிழ்மாந்தர்
எழில்தமிழை ஏன்மறந்தார் ?
எந்நாள் பதவிவரும் ?
ஏதுவழி, பொருள்குவிக்க—
என்றே நினைக்கின்ற
இழிநிலையை ஏனடைந்தார் ?

காசு பணமென்றே
காலமெல்லாம் அலைகின்ற
பாசி பிடித்தவராய்ப்
பைந்தமிழர் வாழ்வதுமேன் ?
ஏசி உரைத்தாலும்
எவனுக்கிங் குறைக்கிறது ?
பேசி என்னபயன் ?
பேதையரா தெளிவடைவார் ?

திண்ணை தூங்கிகளால்
திறல்மறவர் மாறிவிட்டார் !
உன்னை மறந்ததனால்
உயிரையும் இழந்துவிட்டார் !
என்ன சுவைகாண
இனப்பகையை வளர்க்கின்றார் ?
அன்னைத் தாய்த்தமிழே
அடிமைகளா உம்மாந்தர் !

பெண்இன்பம் ஒன்றினையே
பேரின்பம் எனநினைத்து
முன்னைத் தாய்த்தமிழை
முழுதும் மறந்தவர்கள்
தன்னை இழந்தேனும்
தமிழ்காக்க வருவாரோ ?
கண்ணை விற்றேனும்
கனிதமிழைக் காப்பாரோ ?

— கன்னல்.

அன்பர்கள் கவனிக்க ...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5 மணிக்கு மேல் முன் இசைவு பெற்று வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- அமைச்சர்.

தமிழர்க்கென்று தனிநாடு ஒன்றைக் கட்டமைப்போம்!

ஐந்து நாடுகளில்...

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலும் வேண்டும். இந்த வகையில் பெண்களுக்கு இன்று வகுத்துக் கொடுத்திருக்கும் மிகுதியான குமுகவியல் கட்டுப்பாடுகளை நாம் வரவேற்கவே முடியாது. அவை கொடுமையானவை; மிகவும் இரக்கமற்ற அரக்கத்தன்மை வாய்ந்தவை. அவை காட்டு விலங்காண்டிக் காலத்தவை. அவை பெண் பிறவியையே இழிவாக மதிக்கக் கூடியவை; அப் பிறவியையே தாழ்த்தக் கூடியவை.

எந்த மக்களிடையில், பெண் குழந்தை பிறந்தவுடன் 'ஐயோ' என்று ஒலி கேட்கிறதோ ;

எங்கு, பெண் பிள்ளைக்குக் குறைந்த மதிப்பும், பராமரிப்பும், ஆண் பிள்ளைக்கு அதிகச் சலுகையும் உரிமையும் கொடுக்கப்படுகின்றனவோ ;

எந்தக் குமுகத்தில் பெண் பிள்ளைகளின் காதுகளிலும், மூக்குகளிலும் அழகு என்னும் பெயரால் ஓட்டைகள் போடப் பெறுகின்றனவோ ;

எந்த இனத்தில் பெண்ணை, அங்கே பார்க்காதே, இங்கே போகாதே, அவனிடம் பேசாதே, இவனோடு விளையாடாதே -'என்று கட்டுப்பாடுகள் போடப்பெறுகின்றனவோ ;

எங்கு, பெண் பருவமெய்தியவுடன், உட்டைகளில், நடைகளில் தடைகள், கட்டுப்பாடுகள் இடப்பெற்று, அவளை 'உள்ளறைகளிலேயே அடைந்து கிட' என்று கூறப்பெறுகிறதோ ;

எந்த மக்கள் கூட்டத்தில், பெண்ணின் விருப்பம் கேட்கப் பெருமல், அவர்களுக்குப் பெற்றோர்களாலேயோ, பெரியவர்களாலேயோ, திருமணம் உறுதி செய்யப்பெறுகிறதோ ;

எந்த வீட்டில், பெண் திருமணம் ஆனவுடன் அடக்கி ஒடுக்கப் பெறுகிறாளோ ;

எந்த வீட்டில், கணவனை இழந்த பெண் 'அமங்கலி' என்று அனைத்து நற்செயல்களிலிருந்தும் விலக்கி வைக்கப் பெறுகிறாளோ ;

எந்த இனத்தில், ஒரு பெண், தன் வாழ்க்கைத் துணைவன் செய்யும் கொடுமைகளைப் பொறுத்துக் கொண்டு, அவனுக்கு மேலும் மேலும் பணிவிடைகள் செய்யப் பணிக்கப் பெறுகிறாளோ ;

எந்த மக்கள் குமுகத்தில், பெண்-ஆண் செய்யும் அதே குமுகாயப் பணிகளைச் செய்யவும், ஆணுக்குக் கொடுக்கப் பெறும் அதே அளவு கூலியைப் பெறவும் மறுக்கப் பெறுகிறாளோ ;

எந்த நாட்டில், பெண் ஆணைப்போல் பொதுப் பணிகளில் ஈடுபடவும், மணமின்றித் தனித்து வாழவும், தனக்குப் பிடிக்காத, விருப்பமில்லாத கணவனைத் தவிர்த்து விட்டுத் தான் விரும்பியவனை மணந்து கொள்ளவும், அல்லது மணக்காமலேயே அவனோடு வாழவும் மறுக்கப் பெறுகின்றாளோ ;

அந்த நாட்டில், அந்தக் குமுகத்தில், அந்த இனத்தில், அந்த மக்கள் கூட்டத்தில், அந்த வீட்டில், பெண் அடிமைப் படுத்தப்பட்டு, உரிமையிழந்து கிடக்கின்றாள் என்பதை, உயிரியல் வளர்ச்சிக் கோட்பாட்டுக் குகந்தபடி நாம் அனைவரும் ஒப்புக் கொள்ளுதல் வேண்டும். அவ் விடத்திலுள்ள பெண்களின் உரிமைக்காக நாம் பாடுபடுதலும் வேண்டும்.

பெண்ணும் சரி. ஆணும் சரி எல்லா வகை வாழ்வியல் நடைமுறைகளுக்கும் பொருத்தமானவர்களே ; முழு தகுதியுள்ளவர்களே!

ஓர் ஆணுக்குள்ள உரிமைகள் அனைத்துக்கும் பெண்ணும் உரிமையாகிறாள். அன்பு, அறிவு, ஒழுக்கம், நடைமுறை, பண்பு, பழக்கவழக்கம், உடலியல் துய்ப்பு முதலிய உயிரியல் கோட்பாடுகள் அனைத்தும் இருவருக்குமே பொதுவானவையாகக் கருதப் பெறல் வேண்டும்.

குடும்ப வாழ்க்கையை மேற்கொண்ட ஓர் ஆண், தன் மனைவியை விட்டு, இன்னொருத்தியிடம் உடலுறவு கொள்வதைத் தவறென்று கருதாத குமுகம், அவ்வாறுள்ள பெண் மட்டும் வேறோர் ஆணிடம் உடலுறவு கொள்வதை ஏன் பாவமென்றோ, குற்றமென்றோ கருதவேண்டும் ?

நம் நாட்டைப் பொறுத்த வரையில், ஆணுக்குள்ள பாலியல் துய்ப்புரிமை, அல்லது பொருட்படுத்தாத தன்மை, அல்லது பெருங் குற்றமென்று கருதாத தன்மை, பெண்ணுக்கு அறவே மறுக்கப் பெற்றுள்ளது. இஃது ஏற்றுக் கொள்ளக்கூடிய நடுநிலைமை ஆகாது.

தனக்கு உடல் இன்பந் தரத் தகுதியற்ற ஒருவன் கணவன் என்று உரிமை பெற்றிருப்பானுனால், அவனைத் தவிர்த்துவிட்டு, வேறோர் ஆணை எந்த நிலையிலும், அல்லது எந்த அகவையிலும், தன் விருப்பப்படி ஏற்றுக் கொள்ளுகின்ற உரிமையைப் பெண்ணும், அதே வகையில், ஓர் ஆணும், பெற்றிருப்பதே சரியான மாந்தவியல் கோட்பாடாக இருக்கமுடியும். அதுவன்றிக் கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்னும் பெண்ணடிமைக் கோட்பாட்டுக்குக் 'கற்பு' என்று பண்பாட்டு மெருகு பூசுவதும், 'ஒழுக்கம்' என்று உயர்வு கற்பிப்பதும் உயிரியல் கோட்பாட்டையே இகழ்வனவாகும்.

திருமணம் அல்லது இல்லற வாழ்க்கை என்பது வெறும் உடலியல் தொடர்புக்காக மட்டும் ஆன ஓர் உறவு முறை என்று கருத வேண்டியதில்லைதான். ஆனால், வேறு எதற்காக அவ்வுறவு வேண்டும் என்று நாம் கருதுகிறோமா, அவை எல்லாவற்றிலும் இப் பாலியல் தொடர்பே தலையாயது; வலிவானது: தேவையானது மட்டுமன்று; மிகவும் இன்றியமையாதது. ஓர் ஆண் அலிக்கும் (பேடி), பெண் அலிக்கும் (பேடன்) ஏன் நாம் திருமணம் செய்து வைப்பதில்லை? பணக்காரக் கிழவன் ஒருவனுக்கும், ஏழையான கன்னிப்பெண் ஒருத்திக்கும் அவர்கள் வேறு அனைத்து வகைகளிலும் பொருத்தமாயிருப்பினும், அல்லது ஒரு கிழவிக்கும், ஓர் இளைஞனுக்கும்-ஏன் நாம் திருமணம் செய்து வைப்பதில்லை என்பதை நம் சிந்தித்துப் பார்ப்போமானால், திருமணம் அல்லது இல்லற வாழ்க்கை என்பது பெரும் அளவில் என்ன நோக்கத்தின் பொருட்டு என்பது நன்கு விளங்கும். விளங்கவே, அத் தலையாய நோக்கத்தைப் புறக்கணிக்க யார்தாம் கூறமுடியும்? இதனை நன்கு எண்ணிப் பார்க்கக் கேட்டுக் கொள்கிறேன்.

இனி, மாந்தர்கள் பலரும் அவரவர்களின் உருவ வேறுபாடுகளைப் போலவே உணர்வாலும் வேறுபட்டவர்கள். ஒவ்வொருவருக்கும் தனித்தனி அறிவு நிலை, தனித்தனி அன்பு நிலை, தனித்தனி உடலியல் நிலை, தனித்தனி உணர்வு நிலை உள்ளன என்பதை நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும். ஆண்கள் எல்லாரும் ஒரே தன்மை உடையவர் அல்லர், அதேபோல் பெண்கள் எல்லாரும் ஒரே தன்மையுடையவரும் அல்லர். தோற்றம் அல்லது பிறப்பியல் கூறு என்னும் சில பொதுத் தன்மைகளை வைத்துக்கொண்டு, அனைவர்க்கும், ஒரேவகையான நடைமுறையைக் கற்பிப்பதும், ஒருவர் போலவே மற்றவர் எல்லாரும் வாழ்தல் வேண்டும் என்று வலியுறுத்துவதும், சரியான குமுகவியல் அல்லது பொது வாழ்வியல் அணுகு முறை ஆகாது.

எல்லா ஆண்களும் தங்கள் தலைமுடிகளை ஒரே வகையாகத்தான் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதையோ, எல்லாருமே மீசை, தாடி வைத்துக் கொள்ளவேண்டும், அல்லது சிதைத்துக் கொள்ள வேண்டும் என்பதையோ, அனைவரும் ஒரேவகையான உடையைத்தான் உடுத்துகொள்ள வேண்டும் என்பதையோ, எல்லாரும் ஒரேவகையான உணவைத் தான் உண்ணவேண்டும் என்பதையோ, ஒரே முறையான இசையைத்தான் சுவைக்க வேண்டும் என்பதையோ, ஒரே வகையான கல்வியைத்தான் கற்க வேண்டும் என்பதையோ, சரியென்று நாம்ஒப்புவமா?

அதுபோன்றதே, இன்னுஞ் சொன்னால் அவற்றை விட இன்னும் வேறுபாடான தன்மைகள் வாய்ந்ததே அவரவர்களுக் கிருக்கும் பாலியல் துய்ப்பு உணர்வும், காட்சியின்பமும், செவியின்பமும், முகர்ச்சி இன்பமும், நாவின்பமும் எவ்வாறு ஆண் பெண்களுள், ஒருவர்க்கொருவர் வேறுபடுகின்றனவோ, அவ்வாறே உடலின்பமாகிய பாலியல் துய்ப்புணர்வும் வேறுபடுகிறது. இஃதுதான் இயற்கை. மேலும் இதுதான் தலையாயது. மற்றவற்றைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இவ்வொரு துய்ப்பின்பத்தை மட்டும் நாம் ஒழுக்கமென்றும் பண்பாடென்றும் கட்டுப்படுத்துவானேன் ? எண்ணிப்பார்க்க வேண்டும். -(தொடரும்)

பாரீசு மடல்

பிரான்சு உ.த.மு.க. அமைப்பாளர்

த. அரிமாவளங்கோ

போற்றுதலுக்கும், வணக்கத்திற்குமுரிய எங்கள் ஐயா! வணக்கம். ஆணைப்பட்டி பயிற்சி வகுப்பினை நம் உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் செவ்வனே நடத்திய பான்மையைக் கடந்த "தமிழ்நிலம்" வாயிலாக நாங்கள் அறிந்து பெருமித முற்றோம். உடனிருந்து பங்கேற்க முடியாமைக்கு நெஞ்சார வருந்தினோம். அதற்குமுன் பெண்ணாடத்திலும், சென்னையிலும் தமிழ்த் தேசிய மாநாடும் பொதுக்கூட்டமும் முறையே நடந்த செய்தியும் எங்களுக்கு வலுவூட்டுவனவாக அமைந்து மகிழ்வித்தன.

திராவிடக் கட்சிகளின் 17 ஆண்டுகால ஆட்சியில் அவர்களின் இயலாமைகளையும், தில்லியின் ஆட்டக்காய்களாக அவர்கள் இருந்து நகர்த்தப்படவும் வெட்டுக் கொடுக்கப்படவுமான நிலைகளையும் பொது மக்கள் நன்றாக அறிந்து அவர்களை அப்புறப்படுத்தும் தக்காரை நோக்கிக் காத்துக் கிடக்கின்றனர்.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் ஒன்றே எதிர்காலத்தில் தமிழ் மக்களை வழிநடத்திச் செல்லும் தகுதியும், வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்தது. நம் பணியை முடுக்கமாகச் செய்து, போலிகளின் பொய்மை யழியவும், தமிழினம் மேம்பாடுறவும் முனைவோமாக! ஆணைப்பட்டி இன எழுச்சிக்கு முதற்படி! அன்பு மாணாக்கர்,-த. அரிமாவளங்கோ

(2-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

நண்பர்கள் நன்கு அறிவார்கள் ! நம் நூல்களின் விற்பனையாலும், நம் சொற்பொழிவுப் பணத்தாலும், மெய்த்தமிழ் அன்பர்களின் அவ்வப் பொழுதைய நன்கொடைவரவாலும், இப் பேரிழப்பு ஈடுசெய்யப்பட்டு வருகிறது. இருப்பினும் நமக்கு இன்றும் பல்வேறு நண்பர்கள் வழி பெரிய கடன் சுமை இருந்தே வருகிறது.

35 : இத்தனை இடர்ப்பாடான நிலைகளிலும் கொண்ட கொள்கையை மாருமலும், தமிழையும், தமிழினத்தையும், தமிழ்நாட்டையும் எவ்வாறேனும், நம் மூச்சுள்ள வரையிலும், நம்மால் முடிந்த அளவு முன்னேற்றியே தீர்வது என்னும் விடாப்பிடியான பற்றுறுதியாலும், நாம் இன்றுகாறும், தன்னந் தனியராகவே செயல்பட்டுக் கொண்டிருக்கையில், நாம் ஆர்.எசு.எசு.-க்கு ஆதரவு தருகிறோம் என்றோ, அதனிடம் பணம் பெறுகிறோம் என்றோ, சி.ஐ.ஏ. முகவர் என்றோ எற்றல் கூறுவது எத்துணை எத்தும், அறியாமையும், புன்மைச் செயலுமாகும் என்பதை அன்பர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.

36 : உண்மையான தொண்டை ஏற்றுக்கொள்ளாத இறுமாப்பும், நம் நேர்மை, விடாமுயற்சி, அறிவாண்மை இவற்றின்மேல் கொண்ட காழ்ப்பும், நம் துணிவு, ஊக்கம், உழைப்பு, பெருமிதம் இவற்றின் பாற்பட்ட பொறாமையுமன்றோ அவர்களை இவ்வாறு கருதச் செய்திருக்கவேண்டும். இத்தகவற்ற பழியுரைகளும் இழிவுரைகளும் நம் இயக்க வளர்ச்சிக்கு எத்துணை அளவு முட்டுக்கட்டைகளாக அமையும் என்பதை அன்பர்கள் எண்ணிப் பார்க்கவும்.

37 , ஓர் இயக்கத்துக்கான, உறுதியான, மெய்யான கொள்கைகளை வகுப்பதும், அக் கொள்கைகள் வழி மக்களைக் கட்டமைப்பதும், கொள்கைகளைப் பரப்புவதும் எத்துணை அரிய செயல்கள் என்பதை அறிந்தோர் அறிவர். அந் நிலையில் நம் முயற்சிகளைப் பாழ்படுத்தும் நோக்கத்துடனன்றோ அவர்கள் இவ்வெதிர்க் கருத்துகளைப் பரப்பிடுதல் வேண்டும்? இது சரியா ? நேர்மையாகுமா ? -(தொடரும்)

சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்களின்

தமிழ் வளர்ச்சிக்கு ஒரு புத்தாக்க நூல்!

இவை தமிழல்ல

(அயற்சொல் அகராதி)

விலை: 10-00; அஞ்சல் செலவு: 1-00

தொடர்புக்கு :
2/5, காளி கோயில் தெரு, புதுச்சேரி-605009.

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருத்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். [இதழ் எண்:57] பதிவு எண்: TN/MS C)/657

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி
சென்னை—5

பெறுநர்.
திரு/திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.